2022 ஏப்ரல் 8]

78—

சிறப்புப் பொருளாதார மண்டலம்

***18799—திரு. S. அம்பேத்குமார்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை வந்தவாசி வரை விரிவாக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். வாய்ப்புத் தருகிறேன். இந்தக் கேள்வி எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டது. அடுத்து, வாய்ப்புத் தருகிறேன்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *செய்யாறு தொழிற்பூங்கா வந்தவாசியிலிருந்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) கேள்வி நேரத்தில் குறுக்கீடு வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் வேண்டுமானால் விதி 55-ன்கீழ் எழுதிக்கொடுங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) செய்யாறு தொழிற்பூங்கா வந்தவாசியிலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. வந்தவாசி தொகுதியில் தொழில் தொடங்க முனையும் தொழில் முனைவோர்களின் தொழில் மனைத் தேவை செய்யாறு தொழிற்பூங்காமூலம் பூர்த்தி செய்யப்படும். செய்யாறு SEZ சிறப்புப் பொருளாதார மண்டலத்தை வந்தவாசி தொகுதி வரை விரிவாக்கம் செய்யும் கருத்துரு அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார் அவர்கள்.*

திரு. S. அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2006–2008 ஆம் ஆண்டு காலகட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது எங்களது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் பெரு முயற்சியால் செய்யாறு சிறப்புப் பொருளாதார மண்டலம் கொண்டு வரப்பட்டது. அப்போது துணை முதல்வராக இருந்த எங்கள் மக்கள் முதல்வர் அவர்களால் அது தொடங்கி வைக்கப்பட்டு இன்று வரை சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகவே, செய்யாறு சிறப்புப் பொருளாதார மண்டலம் தற்போது விரிவாக்கம் செய்யப்பட்டு வருகின்றது. அதன் அருகிலுள்ள வந்தவாசி சட்டமன்றத் தொகுதியில் விரிவாக்கம் செய்யப்படுமானால் வந்தவாசியிலுள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அவர்களின் வாழ்வாதாரம் பெருகும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து வந்தவாசியில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை விரிவாக்கம் செய்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு SIPCOT-ஐப் பொறுத்தமட்டிலே, பகுதி 1 மற்றும் பகுதி 2 ஆகிய 2 SIPCOT வளாகங்களும் ஏறத்தாழ 2,426 ஏக்கர் பரப்பளவிலே அமைந்து அங்கேயிருக்கக்கூடிய தொழில் மனைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டிருக்கிறது. இப்போது இந்த ஆண்டு அருகிலே இருக்கக்கூடிய மேல்மா உள்ளிட்ட 8 கிராமங்களில் ஏறத்தாழ 3,741 ஏக்கர் பட்டா நிலங்களைக் கையகப்படுத்துதல் மற்றும் புறம்போக்கு நிலங்களை நிலவகை மாற்றம் செய்யக்கூடிய பணிகளுக்கான அரசாணை அண்மையிலே வெளியிடப்பட்டிருக்கிறது. வந்தவாசியிலிருந்து மேல்மா 3 அல்லது 4 கிலோ மீட்டர் பக்கத்திலேதான் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை. எனவே, அங்கேயிருந்து வரக்கூடிய சூழ்நிலை இருந்தாலும்கூட, வந்தவாசி தொகுதி, மேல்மாவை ஒட்டி அருகிலே அமைந்திருக்கக்கூடியதைக் கருத்திலே கொண்டு எதிர்காலத்தில் அப்படிப்பட்ட தேவைகள் வருமானால், நிச்சயமாக அரசு அதைக் கவனத்துடன் பரிசீலித்து ஆவன செய்யும்.*

2022 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *அம்பேத்குமார் அவர்கள்.*

திரு. S. அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதிக்கு அருகிலுள்ள செய்யாறு சிறப்புப் பொருளாதார மண்டலம் மேல்மா கிராமம் வரை தொடங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, மேல்மா கிராமம் வந்தவாசி தொகுதி எல்லைக்குள் 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. எனவே, இப்பகுதியின் அருகில் வந்தவாசி தொகுதிக்குட்பட்ட பகுதியில் அரசு புறம்போக்கு நிலங்கள் அதிகம் உள்ளதால் அதனைப் பயன்படுத்தி, செய்யாறு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை வந்தவாசி வரை விரிவாக்கம் செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும். செய்யாறு-வந்தவாசி முதல் போளூர் வரை* Sagarmala *திட்டத்தின்கீழ் சாலை மேம்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, வந்தவாசியில் தொழிற்சாலைகள் அமைத்தால் போக்குவரத்திற்கு உகந்ததாக இருப்பதோடு, பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மக்கள் முதல்வர் அவர்களும் தாயுள்ளத்தோடு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை வந்தவாசி வரை விரிவாக்கம் செய்து தருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சென்னையைச் சுற்றி 100 அல்லது 120 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு தொழில் மனைகளுடைய தேவை அதிகரித்து வருகிறது. எனவே, இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு, அவர் குறிப்பிடுவதைப்போல, செய்யாறுக்கு மிக அருகிலே அவருடைய தொகுதியிலே சாலை போக்குவரத்து வசதிகளும் மற்ற காரணிகளும், சாத்தியக்கூறுகளும் தொழிற்பூங்காக்களை உருவாக்குவதற்கான ஒரு நல்ல சூழ்நிலையும் அமையுமென்று சொன்னால், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று வருங்காலங்களில் நிச்சயமாக அதை சாதகமாகப் பரிசீலனை செய்யலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்திலே, செய்யாறு சிப்காட் தொழிற்பூங்கா இருக்கிறது. அதற்கு அருகில் வந்தவாசியிலே அதற்கான நிலங்களெல்லாம் அதிகளவில் இருக்கின்றன என்பதையும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று, என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் தொகுதியிலும் அரசு புறம்போக்கு நிலங்கள் அதிகளவிலே இருக்கின்றன. ஆகவே, இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், தமிழகத்திலே எங்கெங்கு விவசாயத்திற்குப் பயன்படாத நிலங்கள் என்று அறியப்பட்டிருக்கிறதோ, அவற்றைக் கணக்கிலே எடுத்து, அப்படிப்பட்ட இடங்களிலே விவசாயிகளைப் பாதிக்காத வகையில், விவசாயத்திற்குப் பயன்படாத நிலங்களைப் பயன்படுத்தி, சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைக்க வேண்டும். எங்கள் கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில் 100 ஏக்கருக்குமேல் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. ஆகவே, அவற்றை வைத்து இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் SEZ–Special Economic Zone என்று சொல்லப்படுபவை இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் மிக அதிகமான இடங்களிலே ஏறத்தாழ 41 இடங்களிலே தனியார் மற்றும் அரசின் சார்பிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. செய்யாறிலே இருக்கக்கூடிய இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலம் என்று சொல்லப்படுவதுகூட, நம்முடைய அரசின் சார்பாக அமைக்கப்படவில்லை. 2016 ஆம் ஆண்டிலே, அந்த இடத்திலே 200 ஏக்கரில் தனியார்மூலம் சிறப்புப் பொருளாதார மண்டலமாக வந்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தொழிற்பூங்காக்களை அமைப்பதற்கு, தொழில் வளர்ச்சிக்கு நிலம் என்பது மிக முக்கியமான தேவையாக இருக்கிறது. நான் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு கேட்டுக்கொள்ள விரும்புவது, அரசியல் மாச்சரியங்களுக்கு

2022 ஏப்ரல் 8]

அப்பாற்பட்ட வகையில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுமே இணைந்து இத்தகைய தொழில் நடவடிக்கைகளுக்காக நாங்கள் நிலங்களைக் கையகப்படுத்துகிறபோது, நிச்சயமாக அதற்கு ஒத்துழைப்புத் தரக்கூடிய ஒரு சூழ்நிலையை திருவண்ணாமலை மாவட்டத்தில் உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்; கூடுமான வரையில் விவசாயிகளுக்குப் பாதிப்பு இல்லாமல் விவசாய நிலங்கள் அல்லாத மற்ற வகையிலே இருக்கக்கூடிய நிலங்களைக் கையகப்படுத்தக்கூடிய சூழ்நிலையை செய்துத் தாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்த அறிவுரையையும் பின்பற்றி அரசு நிச்சயமாகச் செயல்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வலங்கைமான் பகுதி,* silver–tongued *ஸ்ரீநிவாச சாஸ்திரி அவர்கள், அதைப்போல உ.வே.சா. போன்றவர்களையெல்லாம் ஈன்றெடுத்த பெருமைக்குரிய பகுதியாகும். இந்தப் பகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக திருவாரூர் மாவட்டத்தை உள்ளடக்கியிருக்கக்கூடிய டெல்டா மாவட்டங்களில் வேளாண்மைத் தொழில் ஒரு மிக முக்கியமான தொழிலாக இருக்கிறது. தொழிற்பேட்டைகளாக இருந்தாலும், தொழிற்பூங்காக்களாக இருந்தாலும், பெரும் தொழிற்சாலைகளாக*

இருந்தாலும் அங்கே இருக்கக்கூடிய அந்த வேளாண் சூழலுக்கு உகந்ததாக இருக்க வேண்டும். ஏற்கெனவே அதை வேளாண் பாதுகாப்பு மண்டலமாக அறிவித்து, இந்த மன்றத்தில் சட்டமும் இயற்றப்பட்டிருக்கிறது. எனவே, வேளாண்மை தொழிலோடு இயைந்து இருக்கக்கூடிய தொழில்கள், உதாரணத்திற்காக உணவு பதப்படுத்தக்கூடிய தொழில்கள் அல்லது non–leather footwear என்று சொல்லக்கூடிய காலணி தயாரிக்கக்கூடிய, தோல் பதனிடுதல் இல்லாதிருக்கக்கூடிய காலணிகளை உருவாக்கக்கூடிய தொழில்கள் போன்ற தொழில்களை நாம் அந்தப் பகுதிகளிலே உருவாக்கலாம். நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்கூட, வேளாண் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்; இந்த ஆண்டு அங்கே ஒரு தொழிற்சாலையை உருவாக்குவதற்கான அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை கனிவோடு இந்த அரசு பரிசீலித்து அதற்கு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

79—

அடுக்குமாடி குடியிருப்புகள்

***12049—திரு. T.K. அமுல் கந்தசாமி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆனைமலை வட்டம், கம்மாளபட்டி ஊராட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆனைமலை வட்டம், கம்மாளபட்டி ஊராட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி குடியிருப்புகள்